# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 11.04.2023 | supeedsam.com | supeedsam@gmail.com





## தொல்பொருள் திணைக்களம் தங்கள் அதிகாரங்களை

# பௌத்த பிக்குகளுக்கு கொடுத்துள்ளதா?

## கோட்டாவை ஜனாதிபதியாக தெரிவு செய்தது தவறு



2019 இல் கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்ததன் மூலம் தாம் தவறு செய்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒப்புக்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்ததன் மூலம் அப்பிழை திருத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினருமான பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஏப்ரல் 25இல் தேர்தல் இல்லை

உள்ளூராட்சிறத் தேர்தல் திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு

02 ஆம் பக்கத்தில்...



## சாணக்கியன் கேள்வி!

தொல்பொருள் திணைக்களம் தங்கள் அதிகாரங்களை பௌத்த பிக்குகளுக்கு கொடுத்துள்ளதா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் திருகோணமலை, புல்மோட்டை பகுதிக்கு நேற்று

02 ஆம் பக்கத்தில்...

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸில்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஷில் ராஜபக்ஷ என்பதில் தவறொன்றுமில்லை என அந்த கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்

02 ஆம் பக்கத்தில்...

## சிறிய குற்றங்களுக்கு வீட்டுக்காவல்

சிறிய குற்றங்களுக்கு ஆளாகுபவர்களை வீட்டுக்காவலில் வைக்கும் வகையில் சட்டம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு மெகசின், கொழும்பு ரிமாண்ட், கொழும்பு வெலிகடை. வட்டரக்க மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளை உள்ளடக்கியதாக நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பு குழு உறுப்பினர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே

02 ஆம் பக்கத்தில்...

## ஆளுநர் சிங்களத்துக்கு மாற்றினார் நஸீர் தமிழுக்கு மாற்றினார்

(ரக்ஸனா)

ஆளுநர்கள் இங்கு மட்டுமல்ல இலங்கையில் எப்பாகத்திலுமே தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அத்துமீறல் செய்து இனவாதத்தை ஏற்படுத்தக் கூடாது.

ஆளுநர் உத்தரவின் பேரில் அகற்றப்பட்ட புன்னக்குடா வீதி பெயர்ப்பலகை அமைச்சர் நஸீர் அஹமட்டினால் மீள நடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின்

02 ஆம் பக்கத்தில்...

## பொதுமக்களை ஏமாற்றும் பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொள்கின்றது

அரசாங்கம் பொதுமக்களை ஏமாற்றும் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்

02 ஆம் பக்கத்தில்...






## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒத்திவைப்பு

வைகாசி 15ஆம் திகதி நடைபெறவிருந்த 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப்பபீட்சை இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பரீட்சையை நடத்த முடியாது என்பதனால் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்து 29 ஆம் திகதி பபீட்சையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய வாரிக் கொள்கை

02 ஆம் பக்கத்தில்...




# என்னை உருவாக்கினாள் என் தாய்!

தாயானவள் நாம் காணும் தெய்வமாக இவ் உலகில் பரிணிமித்து கடவுளாக மதிக்கப்படுகிறாள். மண்ணில் பயிர் முளைக்க நீரும் , மண்ணும் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறதோ ! அதே போல் மனிதனின் பரிணிமிப்புக்கு தாய் விளங்குகிறாள். தாய் என்பவள் மானிடர்களாகிய நமக்கு மாத்திரம் இல்லாமல் விலங்குகளுக்கும் தாயின் முக்கியத்துவம் சிறப்பம்சமாகின்றது. தாயானவள் தெய்வங்களுக்கு அதிபதியாக விளங்குகின்றாள். நித்தமும் கண்விளித்து , குடும்ப பொறுப்புக்களையும் கண்ணியமாகவும் நேர்மையாகவும் சிறப்பான முறையில் முடிக்கும் பெண் தாயே !



கணவரின் கடைகள் முதல் சமையலைறையின் அட்டகாசங்கள் , குழந்தை பராமரிப்பு போன்ற பல்வேறு விதமான வேலைகளை செய்து முடித்து விட்டு தானும் வேலை செய்கின்றாள். நித்தமும் தன் நம்மை பற்றி யோசித்து கொண்டிருக்கும் உறவு தாய். தாய்க்கும் பின்னர் தாரம் என்பார்கள் தாயுடன் குறிப்பாக 30 வருடங்களாக வாழ்கிறோம். ஏனைய 30 வருடங்களை தாரத்திற்காக வாழ்கின்றோம், அந்த இடத்தில் தாரமே தாயாக நம் கண்களுக்கு முன்பாக இயங்கிக்கொண்டிருக்கும் கடவுளாக காணப்படுகிறாள் .

சில சினிமாப் பாடல்களிலும் கூட தாய் ''சொல்கின்ற வார்த்தைகள் எல்லாம் நோய் தீர்க்கின்ற மருந்தல்லவா '' ,அம்மா எனும் மந்திரமே உலகம் முழுதும் ஆழ்கிறதே போன்ற தாயைப்பற்றிய அமுதமொழிகள் வியாபித்துள்ளமை.

வார்த்தைகளால் கூறமுடியாத கதாநாயகியாகவும் அளவுகோல்களால் அளக்க முடியாத அன்பாகனவளாகவும் . சுய நலம் இல்லாத இதயம் தன்னை விட தன் குடும்பத்தை நேசிப்பவளாகவும். வெறுப்பை காட்ட முடியாத தங்கச்சொரூபமாகவும் நடமாடுகிறாள் தாய்.

தன்னை அழகுப்படுத்தி பார்ப்பதை விட சமையலை அழகாக்கி நம்மை அழகு பார்க்கும் அந்த இளகிய இதயம் யாருக்கு இருக்கும் தாய்க்கே. உதாரணமாக பறவைகள் தங்களது குஞ்சுகளுக்கு தனது கூரிய சொண்டின் மூலம் அவதானமாக உணவூட்டுகிறது இதுவும் தாய்மையே ! .இதை விட சுவாரஸ்மான அம்சம் பசு தன்னுடைய கன்று எங்கே அம்மா அம்மா என அழைக்கிறதோ அங்கு வேகமாக ஓடி தனது கன்றுக்கு பால் கொடுக்கும். இதே போலவே தாய்மை என்பது பறவைகள், விலங்குகள் பாகுபாடின்றி அனைத்து ஜீவராசிகளுக்கும் தாய்மை விளங்கி இருக்கும்.

தாயில் சிறந்த கோயிலும் இல்லை தப்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என முற்கால புராணங்கள் கூறுகின்றன. தாயின் கருவறை ஒரு சொர்க்க பூமியாக விளங்குகிறது. காலையில் படி .மாலையில் படி தன்னை போல் கஷ்ரமில்லாமல் தான் குழந்தை எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என்று தன்னைத்தானே தியாகம் செய்பவள்.

தன்னுயுர் போல் குழந்தையை காத்து நுட்டின் தலைசிறந்த ஒழுக்கமுள்ள பிரஜையாக வாழ வழி காட்டுபவள். இவ்வாறு பல்வேறு இன்னல்கள் ,சவால்களுக்கு மத்தியிலும் உண்மையாய் கடவுளாய் தன் குழந்தையே பாதுகாக்கிறாள். தாயின் மகத்துவம் இந்த உலகில் புரியாத ஜீவன்கள் வாழ முடியாது.

இவ்வாறு பல்வேறு விதமாக போற்றி வழிபடும் தெய்வமாக காணப்படுபவள் என் தாய்.

**ஸோபிதன் சதானந்தம்**
**இளம் ஊடகவியலாளர்**





## ஆளுநர் சிங்களத்துக்கு மாற்றினார்; நஸீர் தமிழுக்கு மாற்றினார்

உத்தரவின் பேரில் எல்மிஸ் வல்கம வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்காக அகற்றப்பட்ட புன்னக்குடா வீதி எனும் பெயர்ப்பலகை அதே புன்னக்குடா வீதி என்ற பழைய நாமத்தோடு அமைச்சர் நஸீர் அஹமட்டினால் மீள நடப்பட்டது.




இந்நிகழ்வு கொழும்பு – மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் ஏறாவூர் நகர புன்னக்குடா வீதி சந்தியில் திங்கள்கிழமை (10.04.2023) இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் உட்பட ஊர்ப்பிரமுகர்களும் சமூக நல விரும்பிகளும் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் நஸீர் அஹமட், ஆளுநர்கள் இங்கு மட்டுமல்ல இலங்கையில் எப்பாகத்திலுமே தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அத்துமீறல் செய்து இனவாதத்தை ஏற்படுத்தக் கூடாது. கிழக்கு மாகாண ஆளுநர் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுத்து இனமுரண்பாடுகளை உருவாக்கும் போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

தொன்று தொட்டு ஏறாவூர் புன்னக்குடா வீதி என புழக்கத்திலிருந்து வந்த பெயரை தென் மாகாணம் காலி நகரைச் சேர்ந்த சிங்கள சமூகத்தவரான எல்மிஸ் வல்கம வீதி என மாற்றுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கடந்த மாத இறுதியில் உத்தரவிட்டிருந்ததும் அந்த விவகாரம் பிரதேசத்தில் சர்ச்சையைக் கிளப்பியிருந்ததும் தெரிந்ததே.

ஆளுநரின் உத்தரவு வெளியானதை அடுத்து ஏற்கெனவே ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் கொழும்பு – மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் அறிவித்தலாக அமைக்கப்பட்டிருந்த புன்னக்குடா வீதி என்ற பெயர்ப்பலகை உடனடியாக அகற்றப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தல் வெளியாகி ஏறாவூரில் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட், பாரம்பரியமாக புன்னக்குடா வீதி என இருந்து வரும் பெயரை எக்காரணம் கொண்டும் எவரையும் மாற்ற அனுமதிக்கப்போவதில்லை என சூளுரைத்திருந்தார்.

அத்தோடு, ஆளுநர் தனது அதிகார எல்லையை மீறுவதைக் கண்டிப்பதாகவும் வெர் தெரிவித்திருந்தார்.

கொழும்பு – மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரிலிருந்து சுமார் 5.23 கிலோமீற்றர் தூரத்தில் புன்னக்குடாக் கடல் அமைந்திருக்கிறது. இது வங்காளக் கடல் பகுதியாகும். ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமாக இந்த வீதி புன்னக்குடா வீதி என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. புன்னை மரங்கள் அங்கு அதிகமிருந்ததால் இது காரணப் பெயராகியுள்ளது.

ஏறாவூர் நகர பிரதேசம் நூறு சதவீதம் முஸ்லிம் சமூகத்தைக் கொண்டமைந்திருந்தபோதும் கூட அந்த வீதிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரினதும் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், திடீரென தென்பகுதி காலிப் பிரதேச சிங்கள சமூகத்தைச் சேர்ந்த 9 பேர் ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதி அதில் ஏறாவூர் புன்னக்குடா வீதிக்கு எல்மிஸ் வல்கம என பெயரை மாற்றுமாறு கோரியிருந்தனர்.

அந்த வேண்டுகோளை உடனடியாக அமுல்படுத்தும் வகையில் ஆளுநர் அதிகாரிகளுக்கு உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

ஆளுநர் ஏற்கெனவே ஏறாவூர் பொதுச் சந்தையை ஏறாவூர் சிங்களச் சந்தை எனக் குறிப்பிட்டு ஏறாவூர் நகர சபைக்கு கடிதம் அனுப்பியிருந்ததும் அது ஆளுநரது உத்தியோக பூர்வ வலைத் தளத்தில் வெளியாகி பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியவுடன் ஆளுநர் அந்த வார்த்தைப் பிரயோகத்தை மாற்றிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மேலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபை நிருவாகத்தைத் தனது பொறுப்பில் வைத்துள்ள ஆளுநர் உள்ளூராட்சி மன்ற நிருவாகம் கலைக்கப்பட்டிருக்கும் தற்போதைய தறுவாயில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முற்று முழுவதுமாக சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை அமல்படுத்துவதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஒத்திவைப்பு

மற்றும் அதற்கு எதிரான ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக முன்னதாகவும் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களை ஏமாற்றும் பிரசாரத்தை

அரசாங்கத்தில் சேர முயற்சிப்பதாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் கூறுவதில் உண்மையில்லை என முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பிலான சர்ச்சைகளும், மத்திய வங்கி தொடர்பான சட்டமூலம் குறித்த குற்றச்சாட்டுகள் அரசாங்கம் நெருக்கடியில் உள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்றார். ஐக்கிய மக்கள் சக்தியின் 54 நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் இதுவரை ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தயானா கமகே, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார மற்றும் அரவிந்த் குமார் ஆகியோர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறிய குற்றங்களுக்கு வீட்டுக்காவல்

அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது விஜேதாச ராஜபக்ச மேலும் தெரிவிக்கையில்,

1934ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல்தடவையாக மனிதாபிமான அடிப்படையில் இந்த நாட்டு சிறைச்சாலை ஒழுங்கு விதிகளில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருக்கும் நபர்களை புனர் வாழ்வளிப்பதற்காக சிறைச்சாலைக்குள்ளேயே 6 நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று சிறு குற்றங்கள் செய்வர்களை வீட்டுக்காவலில் வைக்க முடியுமா என தேடிப்பார்ப்பதற்காக சட்டம் அமைப்பதற்கு தற்போது குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸில்!

சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த ரஞ்சித் பண்டார, இடம்பெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுன கட்சியின் கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம் என தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்று ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட கருத்தே தவிர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ தீர்மானமல்ல.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன அமைச்சரவையை முழுமையாக பதவி விலகுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அதே போல் நிதியமைச்சர் பதவியில் இருந்து விலகி கட்சியின் அரசியல் செயற்பாட்டில் அவதானம் செலுத்துமாறு பஷில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டளைக்கு அமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் முழுமையாக பதவி விலகியது. இறுதியில் பெறுபேறு பிறிதொரு தரப்பினருக்கு சாதகமாக அமைந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஷில் ராஜபக்ஷ என்பதில் தவறேதுமில்லை. ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை. இடம்பெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுனவை முன்னிலைப்படுத்தி செயற்படுவோம் என்று தெரிவித்துள்ளார்

## கோட்டாவை ஜனாதிபதியாக தெரிவு

அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போட்டியிட்டு வெற்றிபெறும் என்றும் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் சுகாதார அமைச்சராகவும் போக்குவரத்து அமைச்சராகவும் பவித்ரா வன்னியாராச்சி செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொல்பொருள் திணைக்களம் தங்கள் அதிகாரங்களை

(திங்கட்கிழமை) விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், திருகோணமலை, புல்மோட்டையில் பிக்குவின் அட்டகாசங்கள் குறித்து கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து இப்பிரதேச மக்கள், இந்த பிரதேசத்திற்கு விஜயம் செய்து தங்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்ற செய்தியைக் கூறுவதற்கு நீங்களும் வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததற்கு இணங்க இன்று நாம் இங்கு விஜயத்தை மேற்கொண்டோம்.

சில நேரங்களில் பிக்குமார்கள் நேரடியாக புல்மோட்டை மக்களிடம் வந்து துப்பாக்கிகளைக் கொண்டு அச்சுறுத்துவதும், மிரட்டுவது மற்றும் கற்களை போடுவது போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றது.

வடக்கு – கிழக்கிலே தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் அனைத்து பிரதேசங்களிலுமே இது போன்ற விடயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. நாங்கள் இவ்விடயங்களுக்கு எதிராகப் போராட்டங்களை செய்திருக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட ஒரு இடத்தில் இதே பிக்கு இரவு நேரத்தில் இராணுவ பாதுகாப்புடன் வந்து காணி அபகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவரை விரட்டியடித்தோம்.

இது போன்ற அடாவடி பிக்குகளிடம் இருந்து எங்கள் காணியைக் காப்பாற்ற வேண்டும். எனத் தெரிவித்துள்ளார்.

## ஏப்ரல் 25ல் தேர்தல் இல்லை

உறுப்பினர்களுக்கு இடையில் இன்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, தற்போதைய நிலவரப்படி இம்மாதம் 25ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட மாட்டாது. அத்தோடு எதிர்காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் திறைசேரி அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்படும் என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு- விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பாற்குடபவனி!!





மட்டக்களப்பு - விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பாற்குடபவணி மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 24 ஆம் திகதி இடம் பெற்றது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேக பூசை இடம்பெற்று நேற்று காலை பாற்குடபவணியும், சங்காபிஷேகமும் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

சொறுவாமுனை அருள்மிகு ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தில் இருந்து விஷேட பூஜைகளுடன் ஆரம்பமான பாற்குடபவணியானது பிரதான வீதியின் ஊடாக அரோகோரா கோசத்துடன் அடியார்கள் தமது சிரசில் பாற்குடங்களை சுமந்துவந்து மூலவர் மூர்த்தியான ஸ்ரீ சித்தி விநாயக பொருமானுக்கும் ஏனைய தொய்வங்களுக்கும் பாலாபிஷேகம் இடம் பெற்று தொடர்ந்து விஷேட பூஜைகளும் இடம் பெற்றிருந்தது.

# 10 மில்லியன் பெறுமதியான பாடசாலை தளபாடங்கள் வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அஸ் ஸுஹறா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர் மஜீதிய்யாவின் வேண்டுகோளுக்கிணங்க தரம் 4 ,5 மாணவர்களின் பாவனைக்காக 10 மில்லியன் பெறுமதியான ஒரு தொகுதி பாடசாலை தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை(8) மாலை குறித்த நிகழ்வு நடைபெற்றதுடன் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹுதுல் நஜீமிடம் உத்தியோகபூர்வமான இப்பாடசாலை தளபாடங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் அதிபர் உட்பட பாடசாலை சமூகத்திடம் தளபாடங்களை உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மாணவர்களின் கல்வி செயற்படுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ளவேண்டுமாக இருந்தால் அடிப்படை வசதிகளான தளபாடங்கள் வகுப்பறைகள் என்பன நன்றாக அமைந்திருத்தல் வேண்டும் என்ற தொனிப்பொருளில் குறித்த பாடசாலை தளபாடங்களை பாடசாலையின் தரம் 01 க்கான பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எம்.ரி.எம்.அனப் உட்பட ஏனைய உறுப்பினர்கள் இணைந்து வலயக்கல்வி பணிப்பாளரிடம் கையளித்திருந்தனர்.

மேலும் அஸ் ஸுஹறா வித்தியாலயத்தின் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் பெற்றோருடன் இணைந்து பாடசாலைக்கு தேவையான வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல விடயங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இறுதியாக இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டு கஞ்சாவினை கடத்தியவர் அதிரடிப்படையினரால் கைது



(பாறுக் ஷிஹான்)

மோட்டார் சைக்கிளில் நாட்டு கஞ்சாவினை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (9) மாலை விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் (வயது -59 )மண்டூர் பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் மேற்குறித்த நாட்டு கஞ்சா போதைப் பொருளை கடத்தி செல்வதற்காக தயாராக இருந்த வேளை அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவில் உள்ள வேப்பயடி சந்தியில் வைத்து சந்தேக நபர் மோட்டார் சைக்கிளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து தொலைபேசி ஒன்று 1 கிலோ 50 கிராம் பொதி செய்யப்பட்ட நாட்டு கஞ்சா ஒரு தொகை பணம் மோட்டார் சைக்கிள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை



வலயக்கட்டளை பதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி நெத்தசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்டுகளான பண்டார(13443),வீரகோன் (33354 ), பெரேரா (71664), பொலிஸ் கன்ஸ்டபிள்களான சதீப்(90616) , நிமேஸ் (90699) , வாகனச் சாரதி டபிள்யு.எம் குணபால (19401) ,அதிகாரிகள் மற்றும் புலனாய்வு பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் சவளக்கடை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த குறித்த சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் மாறுவேடத்தில் சென்று நீண்ட போராட்டத்தின் பின்னர் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு



(அ . அச்சுதன்)

எழுத்தாணி கலைப் பேரவையினால் முன்னெடுக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வும் தொடர்பாடலையும் ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு திருகோணமலை அலஸ் தோட்டத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

எழுத்தாணி கலைப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்..ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்களான மாவட்ட பெண்கள் சமாசத்தின் பிரதிநிதிகள் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருடன் உள்ளூரில் ஊடகவியலாளர்களுடன் தொடர்புடைய அரச சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் சமூக மட்ட அமைப்புக்களுடன் நேரடியாக தொடர்பு பட்டு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# பணத்தை கொள்ளையிட மறைந்திருந்து தாக்குதல்!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

பணத்துடன் தனிமையில் சென்ற நபர் ஒருவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை காட்டுப் பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரிதிதென்னை எரிபொருள் நிறப்பு நிலையத்திலிருந்து ஓட்டமாவடி நோக்கி பெருந்தொகை பணத்துடன் சென்ற நபர் மீதே இந்த கொலைவெறி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் தனிமையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது புணானை - பொத்தானை பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள காட்டுப் பகுதியில் முகமூடி அணிந்தவாறு நின்ற நபர் மரக் கட்டை ஒன்றினால் தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இவ்வாறு பணத் தொகையுடன் தாக்குதலுக்குள்ளான நபர் கொள்ளையனிடமிருந்து சமயோசிதமாக தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு பலத்த காயங்களுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீதா எலியா பூங்காவிலுள்ள பெயர் பலகைகள் சேதம்




(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா, சீதா எலியா, சண்டதன்ன சுற்றுச்சூழல் பூங்காவிலுள்ள பெயர் பலகைகள் மற்றும் உயரங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகள் சிலரால் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக சீதாஎலியா விவசாய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீதா எலியா வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன துணை இயக்குனர் எம். சி. ஜயசிங்க தெரிவிக்கையில் நாட்டிலுள்ள 10 மிக உயரமான மலைத்தொடர்களில் ஒன்பது மலைத்தொடர்கள் இந்த இடத்தில் காணப்படுவதாகவும், பிதுரங்கல, தொட்டுகொலை கந்த, கிகிலியாமான, கிரேட் வெஸ்டன், கொனிகல் ஹில், கிரிகல்பொத்த, பரியால கந்த, ஹக்கல மற்றும் நமுனுகுல மலைத்தொடர்களின் பெயர் பலகைகள் மற்றும் அவற்றின் உயரங்களை குறிக்கும் பெயர் பலகைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சண்டதன்ன சூழலியல் பூங்காவை பார்வையிட வந்தவர்கள் அல்லது காடுகளில் இருந்து பூங்காவிற்குள் பிரவேசித்த சிலரோ அல்லது குழுக்களோ இதனை செய்திருக்கலாம் எனவும், இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். சண்டதன்ன சூழலியல் பூங்கா மிகவும் உணர்திறன் வாய்ந்த சூழலியல் வலயத்தில் அமைந்துள்ளதால், சுற்றுலாப் பயணிகள் அவ்வாறான சேதங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கழிவுகளை கொட்டுவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கிண்ணியா ஆயுர்வேத வைத்திசாலை குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் இம்ரான் எம்.பி கலந்துரையாடல்

**(ஹஸ்பர்)**

கிண்ணியாப் பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், சுதேச வைத்திய திணைக்கள ஆணையாளர் திருமதி எஸ்.ஸ்ரீதர் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

சமீபத்தில் சுகாதார அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது நடுத்தீவு வைத்தியசாலையின் ஆளணி பற்றாக்குறை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலை வாட்களை உள்ளடக்கிய மாவட்ட வைத்தியசாலையாக இருந்த போதிலும் அதற்குத் தேவையான வைத்தியர்கள் மற்றும் ஏனைய ஆளணியினர் இல்லை. இதனால் நோயாளிகள் முழுமையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக இம்ரான் எம்.பி இதன்போது சுட்டிக் காட்டினார்.



இவ்வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலை என திறந்து வைக்கப்பட்டாலும் இதற்குரிய ஆளணி சாதாரண வைத்தியசாலைக்குரியதாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆளணி அங்கீகாரமின்றியே இது மாவட்ட வைத்தியசாலையாகத் திறக்கப்பட்டுள்ளது. இதனாலேயே வைத்தியசாலைக்குரிய ஆளணியை வழங்க முடியாதுள்ளதாகவும் இது குறித்து ஆளணி ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

கொழும்பு ஆளணி ஆணைக்குழுவோடு பேசி புதிய ஆளணி அங்கீகாரத்தை விரைவு படுத்த தான் நடவடிக்கை எடுப்பதாகவும், அதற்குத் தேவையான தகவல்களைத் தருமாறும் இதன்போது இம்ரான் எம்.பி தெரிவித்தார்.

நடுத்தீவு மற்றும் சூரங்கல் வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு இருப்பதை இதன்போது சுதேச வைத்திய திணைக்கள ஆணையாளரின் கவனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்தார். அதனைத் தான் கவனத்தில் எடுத்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அவர் உறுதியளித்தார்.

# திருக்கோவில் பிரதேசத்தில் சமுர்த்தி அபிமாணி வர்த்தக் கண்காட்சியும் விற்பனையும்





**(திருக்கோவில் நிருபர் - எஸ்.கார்த்திகேசு)**

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஒழுங்கமைப்பில் தம்பிலுவில் மற்றும் விநாயகபுரம் சமுர்த்தி வங்கி சங்கங்களை ஒன்றினைந்து மாபெரும் சமுர்த்தி அபிமாணி வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்று இருந்தன.

இந் நிகழ்வானது திருக்கோவில் பிரதேச செயலக வளாகத்தில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமையில் இன்று காலை இடம்பெற்று இருந்தன.

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி திணைக்களத்தினால் சமுர்த்தி அபிமாணி வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்று திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இத தேவேளை சமுர்த்தி வேலைத்திட்டத்தினை சிறந்த முறையில் கடந்த ஆண்டில் நிறைவேற்றி இருந்த திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவில் கடமைபுரியும் நான்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்;கு அதிதிகளால் பாராட்டி நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் கலந்து கொண்டு சமுர்த்தி அபிமாணி வர்த்தக கண்காட்சியினை ஆரம்பித்து வைத்திருந்ததுடன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் கே.நேசராசா திருக்கோவில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் விநாயகபுரம் தம்பிலுவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# நாவிதன்வெளியில் விற்பனை சந்தையும் கண்காட்சியும்



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாவிதின்வெளி பிரதேச செயலகம் சமூர்த்தி திணைக்களத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த சமூர்த்தி அபிமானி - 2023 விற்பனை சந்தையும் கண்காட்சியும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் (09) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உணவு உற்பத்தி பொருட்களை இங்கு காட்சிப்படுத்தி விற்பனையில் ஈடுபட்டனர்.

பிரதேசத்திலயே உற்பத்தி செய்யப்பட்ட நஞ்சற்ற உணவுப் பொருட்களை பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

# ஏறாவூர் பிரதேசத்தில் உலருணவுப் போதிகள் வழங்கும் நிகழ்வு



**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேசத்தில் வாழ்வாதாரம் குறைந்த 130 குடும்பங்களுக்கு சுமார் மூவாயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு பிரதேசசெயலாளர் நிஹாறா மௌஜூதின் பங்கேற்புடன் நடைபெற்றது.

கட்டார் நாட்டில் தொழில் புரியும் ஏறாவூர்ப் பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஒன்றியத்தின் அமைப்பாளர் எஸ்எம்எம். ஹனிபா தெரிவித்தார்.

ஒன்றியத்தின் தலைவர் செய்யித் அஹமதின் தலைமையில் மிச்நகர் இல்மா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் நஜிமுதீன், பள்ளிவாயல்கள் சம்மேளனத்தலைவர் முகைதீன், முன்னாள் அதிபர் றிபாய்தீன் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் முபாறக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஏறாவூர் ஹிதாயத் நகர், மிச்நகர், தாமரைக்கேணி, மீராகேணி ஐயன் கேணி மற்றும் ஸம் ஸம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலிருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அரிசி, சீனி, பருப்பு, தேயிலை மற்றும் கோழி இறைச்சி உள்ளிட்ட பொருட்கள் இப்பொதிகளில் காணப்பட்டன.

புனித றமழான் காலத்தையிட்டு இப்பணி முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட சந்தை

**(ஹஸ்பர்)**

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சமுர்த்தி கிளை ஏற்பாடு செய்த சந்தை நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் (10) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற குறித்த சந்தையானது தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நஞ்சற்ற உணவு உற்பத்திகளான காய் கறி மரக்கறி வகைகள், உள்ளூர் உற்பத்தி பொருட்கள் என பல பொருட்கள் விற்பனை காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் ,நிருவாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட சமுர்த்தி கிளை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





சொல்லத் துடிக்குது மனசு: 09

# ஊர் ஒற்றுமையின் வெளிப்பாடு

# சர்க்கரை அமுது

*ஊர்கூடி ஒன்றிணைந்தத பக்தியொடு
ஊக்கத்துடன் செய்திடுவர் சர்க்கரை அமுதை*

இந்துக்களின் வாழ்க்கை தமது வாழவியல் அம்சங்களோடு தொடர்புபட்டவை. எந்த விடயத்தைத் தொடங்கும்போதும் இயற்கை அம்சங்களோடு தொடர்புபடுத்தியே தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் சென்றனர். இயற்கையை வழிபட்டனர். இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இந்த வாழ்க்கை ஈந்தது என நம்பினர். இத்தகைய வாழ்க்கை முறை பல தாக்கங்களுக்கு உட்பட்டு மருவிக் கொண்டிருக்கின்றன. சில கிராமங்களில் இவற்றுள் சிலவற்றைக் கைவிடாது பேணி வருகின்றனர். அதித நாகரிக மோகமும், அதன் செல்வாக்கும், சமூக, கலாசாரப் பிறழ்வுகளும், விஞ்ஞான தொழினுட்ப மாற்றங்களும், எங்கும் எதிலும் அவசரப் போக்கும் இந்துக்களின் பாரம்பரிய வாழ்கை முறைறைகள் சிலவற்றை மாற்றி அமைத்திருக்கின்றன. தற்காலத்தில் சகல செயற்பாடுகளிலும் பணம் முன்னுரிமைப் படுத்தப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் சமயச் செயற்பாடுகளில் பணத்துக்கும் ஆடம்பரத்துக்கும் கொடுக்கின்ற முக்கியத்துவம் காரணமாகப் பல பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் அருகிக் கொண்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் ஆனி மாதத்தில் வீடுகளில் நடத்தப்படுகின்ற சரக்கரை அமுது கொடுக்கும் நிகழ்வு.

வீடுகளில் நடைபெறும் இந்துப் பாரம்பரிய சமய வழிபாட்டு நிகழ்வுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். தைப்பொங்கல், புதிரெடுத்தல், புதிருண்ணல், சித்திரை வருடப் பிறப்பு, சர்க்கரை அமுது கொடுத்தல், வைரவர் சடங்கு, தண்ணச் சோற்றுப் பள்ளயம், ஆடிப் பூரனை அமுது, பிதிர் வழிபாடு, நவராத்திரி பூசை, கார்த்திகை விளக்கீடு ஆகியவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். அவற்றுள் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு சர்க்கரை அமுது கொடுத்தல். இது செலவு கூடிய நிகழ்வு என்பதனால் போடிமாரும், ஓரளவு வசதி உள்ளவர்களுமெ இந்நிகழ்வைப் பெரும்பாலும் நடாத்துவர். ஆனி மாதத்தில் நடைபெறும் இதனை வீட்டுத் தலைவர் நிறைவேற்றுவார் அல்லது பூசாரியைக் கொண்டு நடத்துவர். சர்க்கரை அமுது கொடுக்கும் செயற்பாடுகள் நாள் பார்த்துத் தீர்மானிக்கப்பட்ட தினத்திற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பிருந்தெ பூர்வாங்க ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். வீட்டில் உள்ளவர்களும் உறவுகளும் சுறுசுறுப்பாகச் செயற்பாடுகளை மேற்கொள்வர்.

சர்க்கரை அமுது கொடுக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடத்துக்கு இடம் வேறுபடுகின்றன. கொக்கட்டிச்சோலைப் பிரதேசக் கிராமங்களில் இந்நிகழ்வு சற்று வித்தியாசமாகவும் மிகச் சிறப்பாகவும் நடாத்தப்படுகின்றன. இங்குள்ள மக்கள் மத்தியில் மாரியம்மன் வழிபாடு மிகப் பிரபல்யமானது. மாரியம்மன் தமக்கு மழையையும் நோயற்ற வாழ்வையும் தருவதாகக் கருதுகின்றனர். அதனால் சர்க்கரை அமுதையும் அதனைத் தொடர்ந்து வரும் நிகழ்வுகளையும் தம்மை வாழ வைக்கும் மாரியம்மனுக்கு நன்றிக் கடன் செலுத்தும் ஒன்றாகவே கருதி நிறைவேற்றுகின்றனர். இந்நிகழ்வில் சர்க்கரை அமுது முதல் நாளும், அன்றிரவு தமது வீட்டையும், தொழில் துறையையும் பாதுகாக்கும் ஆதிவைரவக் கடவுளுக்குப் பெரும் சடங்கும், மறுநாள் காலை சூரிய உதயத்தின் பின் இரண்டரை நாளிகைக்கு முன் (ஏழு மணிக்கு முன்னர்) தண்ணிச் சோற்றுப் பள்ளயம் என்ற நிகழ்வையும் பயபக்தியோடு செய்து முடிப்பர்.

நாப்பது வருடங்களுக்கு முன்னர் மன்னர் சர்க்கரை அமுது ஒரு வீட்டில் நடக்கிறதென்றால் அதனை ஓர் ஊர் நிகழ்வாகவே பெரும்பாலானோர் கருதுவர். வீடு, வாசல், வளவு, வீதி ஆகியவற்றைச் சுத்தப்படுத்துவதில் ஊர் மக்கள் பலர் ஒன்று கூடி நின்று வேலை செய்வர். சர்க்கரை அமுது வைக்கும் தினத்துக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் இப்பணி நிறைவடைந்திருக்கும். அன்றைய தினம் வீட்டினைக் கழுவிச் சுத்தம் செய்வார்கள். சுவாமி அறை வலப்பக்கமாக கிழக்க வாசல்(வீட்டு நிலையம்), தெற்கு வாசல்(குடில் நிலையம்) வீடுகளில் பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கும். சுவாமி அறை



தனி அறையாகலும், நிலத்துக்குக் களிபோட்டுப் பூசி, மெழுகி இருக்கும். வெள்ளிக் கிழமை தோறும் சுத்தப்படுத்திச் சாணம் போட்டுப் பூசி, மெழுகுவார்கள். அதேபோல் அன்றைய தினமும் சுத்தப்படுத்தி, சாணத்தினால் பூசி மெழுகுவர். மூன்று நாட்களுக்கு முன்பிருந்தே வீட்டில் ஆச்சாரம் பேணப்படும்.

சர்க்கரை அமுது, வைரவர் பூசை, தணிணிச் சோற்றுப் பள்ளயம் ஆகியவற்றுக்காகச் சேகரிக்கப்பட்ட பொருட்கள் யாவும் சுவாமி அறை அல்லது சுவாமி



**சோலையூர்க் குருபரன்**

அறைக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் மிகப் பாதுகாப்பாக தனித்தனியே பிரித்து (மூன்று பூசைகளுக்கும்) வைப்பர். சர்க்கரை அமுது நூறு, நூற்று ஐம்பது பேருக்கு வழங்கக் கூடியதுபோல் பெரிய வெங்கலக் கடாரத்தில் பொங்கப்படும். சர்க்கரை அமுது வெள்ளைப் பச்சை அரிசியுடன் பயறு, எருமைப் பால், பசுப்பால், தேங்காயப் பால், சீனி, சர்க்கரை, கற்கண்டு, பேரிச்சம் பழம், பிளம்ஸ் (திராட்சை வற்றல்), கரும்புச்சாறு, தேன், பசுநெய், வாழைப்பழம் ஆகியன கொண்டு பொங்கப்படும். பொங்கல் பானையைக் கிண்டுவதற்கு பெரிய அகப்பையும், கடைவதற்கு அதற்கெனத் தயாரிக்கப்பட்ட சவளும் பயன்படுத்தப்படும். அத்துடன் பசுப்பால், இளநீர், மா, பலா, வாழை, தோடை, அன்னாசி, விளா, மாதுளை, பேரிச்சை அகிய பழங்கள், பிளமஸ், சீனி, சர்க்கரை, கற்கண்டு, வெய்காயம், கரும்புச்சாறு ஆகியன கொண்டு தயாரிக்கப்படும் பாணக்கம்(பஞ்சாமிர்தம்), அரிசிமா, தேங்காய்ப்பூ, தேங்காய்க் கட்டிச் சிறு துண்டுகள், சீனி, பிளம்ஸ், வெங்காயம், தேவையெனில் சிறிதளவு மஞ்சள் ஆகியன கொண்டு தயாரிக்கப்படும் துள்ளுமாவும் மாரியம்மனுக்குரிய பிரதானமான பிரசாதங்களாகக் கொள்ளப்படும்.

பொங்கல் வேலை நடந்து கொண்டிருக்கும் போது வீட்டுத் தலைவன் அல்லது பூசாரி சுவாமி அறைக்குள் மடை வைப்பதற்குரிய செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். ஐந்து வயதுக்கும் ஏழு வயதுக்கும் இடைப்பட்ட மூன்று பெண் பிள்ளைகளை ஆச்சார முறைப்படி சாரி, பிளொஸ் அணிந்து அழைத்து வருவர். அவர்களின் கையில் வேப்பிலை கொடுத்திருப்பர். இவர்கள் மூவரையும் சர்க்கரைப் பிள்ளைகள் எனவும் அழைப்பர். சுவாமி அறைக்கு முன்னால் உள்ள வீட்டு வாசற்படிக்கு அருகே பலகை ஒன்று வைத்து வீட்டுக்குரிய நிரந்தர சலவைத் தொழிலாளி (கட்டாடி) பலகையின்மேல் வெள்ளைத் துணி விரிப்பார். அதன்மெல் மூன்று பிள்ளைகளையும் நிறுத்துவர். முதலாவது பெண் பிள்ளையைப் பிள்ளையார் ஆகவும், இரண்டாவதாகக் கட்டாடியின் மகள் அல்லது அவரின் உறவுக்காரப் பிளை்ளை மாரியம்மனாகவும், மூன்றாவது பிள்ளையை ஏனைய சக்திகளாகவும் பாவனை செய்து வீட்டுத் தலைவி கால் களுவுவார். கால் களுவும் தண்ணீருள் அறுகம் புல், மஞசள் மற்றும் பூக்கள் போடப்பட்டிருக்கும். கால் கழுவி முடிந்ததும் மூவருக்கும் திருநீறு பூசி,



மஞ்சனால் பொட்டு வைத்து கொண்டையில் பூ, அறுகம்புல் ஆகியவற்றைச் செருகுவார். பின்னர் மூவருக்கும் வெற்றிலை, பாக்கு, பழம், பூ வைத்து மடித்து சாறித் தலைப்பில் வைத்துச் சுருட்டி இடுப்பில் செருகுவார். அதன் பின்னர் ஒருவர் அல்லது மூன்று ஆண்கள் வந்து மூன்று பிள்ளைகளையும் தூக்கிச் சென்று அதற்கென வெள்ளை விரித்து, விரிக்கப்பட்டிருக்கும் பாயின் மேல் உட்கார வைப்பர். இடமிருந்து வலமாகப் பிள்ளையார், மாரியம்மன், ஏனைய சக்திகள் எனக் கிழக்கு அல்லது மேற்குத் திசை நோக்கி அமர வைத்திருப்பர்.

சுவாமி அறையில் சுவாமி படங்களின் முன்னால் நிறை குடம் வைப்பர். நிறை குடத்துக்கு முன்னால் பிரதான மடையும், படையலும் வைக்கப்படும். பின்னர் தெய்வங்களாகப் பாவனை பண்ணப்பட்டிருக்கும் மூன்று பெண் பிள்ளைகளுக்கும் முன்னால் பிள்ளையார், மாரியம்மன், ஏனைய சக்திகளுக்கு ிரிய மடையும், படையலும் வைக்கப்படும். மடைகளில் வாழை இலை, பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம், மாம்பழம், பலாப் பழம், அன்னாசிப் பழம், தோடம் பழம்(பழங்களின் அறுத்த துண்டுகள்), கரும்பு தாமரைப்பூ உட்படப் பலவகைப் பூக்கள் ஆகியனவும் வைக்கப்படும். படையலில் சர்க்கரை அமுதும் அதன் அருகில் பாணக்கம், துள்ளுமா ஆகியவற்றையும் வைத்துப் பூசையை ஆரம்பிப்பர். சில இடங்களில் மோதகம், கொழுக்கட்டை, பலகாரம் ஆகியவற்றையும் படையலோடு சேர்த்து வைப்பார்கள். பூசை செய்பவர் பூசாரி எனில் சில மந்திரங்களையும் உச்சாடனம் செய்வார். பஞசபுராணம், திருப்புகழ். மாகாமாரித்தேவி திவ்விய கரணி நூலிலுள்ள சில மாரியம்மன் பாடல்கள் ஆகியனவும் பாடப்படும். அவற்றுள் அமிர்பரி பூரணி நளினவிரி காரணி. எனத் தொடங்கி வரும் மாரியம்மனுக்குரிய பாடல்கள் அனைத்தையும் மிகப் பிரதானமாகப் பாடுவார்கள். சில இடங்களில் இப்பாடல்கள் பாடப்படும்போது உடுவடித்துக் குழலும் ஊதுவர்.

பூசை முடிந்து தண்ணீர் தெளித்ததும் வீட்டுத் தலைவி தனது முந்தானையில் வாழை இலை வைத்து மூன்று பிளளைகளிடமும் மடிப்பிச்சை இடுமாறு கோருவார். பிள்ளைகளும் தமக்கு முன்னால் உள்ள படையலில் இருந்து ஒவ்வொரவரும் மூன்று மூன்று கைப்பிடியளவு பிரசாதம் எடுத்து மடிப்பிச்சையாக இடுவர். மடிப்பிச்சை எடுத்ததும் அடுத்த வருடம் வரையும் நோய், நொடிகள், துன்ப, துயரங்கள் நெருங்காமல் பாதுகாப்பீங்களா? என மூன்று முறை வாக்குக் கேட்பார். மூன்று முறையும் அவர்கள் ஓம் எனப் பதிலளிபர். அதன் பின்னர் படையலில் இரந்து மூம்மூன்று கவளம் பிரசாதமெடு்த்து உண்ணுமாறு கோருவார். அவர்கள் உண்டதும் சந்தோசமாக வீடு செல்லுமாறு கோரி, அவரவர் மடை, படையல் ஆகியவற்றை மடித்து, வெள்ளைத் துணியில் வைத்துப் பொட்லமாக்கி அவரவர் கையில் கொடுப்பார். அதனை எடுத்துக் கொண்டு சர்க்கரைப் பிள்ளைகள் மூவரும் வெளியே வந்ததும் வாசலில் வைத்துக் கைகழுவி வீட்டுக்கு அனுப்பி வைப்பர்.

அன்றைய தினம் சிறுவர் முதல் பெரியோர் வரை நூற்றுக்கு மேற்பட்ட ஊரவர்கள், உறவினர்கள் வந்திருப்பர். அவர்களை வரிசைகளாக்கித் திருநீறு பூசிப் பொட்டு வைப்பர். அதன்பின் துள்ளுமா, பாணக்கம் ஆகியவற்றை வழங்குவர். இறுதியாக வாழை இலை அல்லது தாமரை இலை விரித்து பொங்கல் பிரசாதம், வாழைப்பழம் ஆகியவற்றை வைத்து உண்ணுமாறு கோருவர். சிலர் உண்ணுவர். சிலர் தமது வீட்டுக்கு எடுத்துச் செல்வர். பின்னர் பணியில் ஈடுபட்ட சகலருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டதும், உறவினர் வீடுகளுக்கு அனுப்பப்படும். அத்தோடு சர்க்கரை அமுது நிகழ்வு நிறைவுற்றதும் அன்றிரவு நடைபெற இருக்கும் ஆதிவைரவர் சடங்குக்குரிய வேலைகள் ஆரம்பமாகும்.

*வீடு நலமபெறக் காக்கும் ஆதிவைரவருக்கும்
நெடு வாழ்வுவாழ வழிசமைக்கும் மாரியம்மனுக்கும்
முடு கெனவே படையல் வைத்து வணங்கிடுவோம்*

**தொடரும்.**

# ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குள் மாடுகள் கட்டாக்காலியாக நடமாட்டம் அதிகரிப்பு!

## மாடுகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கையுடன் மாடுகளும் பறிமுதல்

(ம.கிரிசாந்)

ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குள் காணப்படுகின்ற பிரதான வீதிகளில் மாடுகளை கட்டாக்காலியாக நடமாட விடுவதினால் வீதிகளில் போக்குவரத்து செய்யும் பொது மக்களுக்கு விபத்துக்கள் ஏற்படுவதுடன், பொது மக்களின் வளவுகளிலுள்ள பெறுமதியான பயிர்களுக்கும் சேதத்தினை ஏற்படுத்தி வருவதனையும் அண்மைக்காலமாக காணக்கூடியதாக இருந்துவருகின்ற நிலையில்.

இது தொடர்பான முறைப்பாடுகள் ஆலையடிவேம்பு பிரதேச பொது மக்களிடமிருந்து ஆலையடிவேம்பு பிரதேசசபையினருக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பட்டுவந்த நிலையில்.

ஆலையடிவேம்பு பிரதேசசபையின் எல்லைக்குள் உள்ள மாடு வளர்ப்பு உரிமையாளர்கள் தங்களது மாடுகளை பிரதான வீதிகளில் கட்டாக்காலியாக நடமாட விடுவதனால் பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடியதாக அமைகின்றது ஆகவே, வீதிகளில் கட்டாக்காலியாக நடமாடும் மாடுகளின் உரிமையாளர்கள் மாடுகளை தங்களது கட்டுப்பாட்டினுள் வைத்து பராமரித்து வளர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றார்கள்.

மேலும் 2023.04.10 ஆம் திகதிக்குப் பின் வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் காணப்பட்டால் அம்மாடுகளின் உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக 1987ஆம் ஆண்டின் பிரதேச சபை சட்டத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் என்பதனை ஆலையடிவேம்பு பிரதேச சபையின் செயலாளர் திரு.கீ.சுரேஷ்ராம் அவர்கள் மக்களுக்கு அறியத்தருகின்றார்.

# சுதந்திர கட்சியின் நுவரேலியா தொகுதி அமைப்பாளர் சதானந்தன் திருமுருகனின் ஊடக சந்திப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் இந்த நாட்டில் வாழும் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடும். அது மாத்திரமல்லாமல் ஊடக நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் சுயாதீன அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் அனைவரையும் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் பயங்கரவாதிகளாக்கப்படுவார்கள் எனவே இந்த சட்டம் பாராளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்டால் அரசுக்கு எதிரான அனைவரும் பயங்கரவாதிகள் என அடையாளப்டுத்தி கைது செய்யப்படுவார்கள் என ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதி குழு தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக நுவரெலியாவில் நேற்று (10) திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் கடந்த 1979 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற பொழுது இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்பு சட்டத்தை விட இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டம் மிகவும் மோசமானதாக இருக்கும். இந்த நாட்டில் உள்ளூர் யுத்தம் நடைபெற்ற பொழுது இயற்றப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தினால் மக்கள் எவரும் எங்கும் சுதந்திரமாக செல்ல முடியாமல் இருந்தனர். அதே வேளை தேசிய அடையாள அட்டை இல்லாத பல மலையக பெருந்தோட்ட இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டாரகள். மலையக பெருந்தோட்ட இளைஞர் யுவதிகள் வெளி மாவட்டங்களில் தொழில் செய்ய போக முடியாமல் வீட்டிலே அடைப்பட்டு அவஸ்தைப்பட்டார்கள்.

அன்று செயலில் இருந்த பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தைவிட புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மிகவும் கடுமையாக இருக்கும். இந்த நாட்டில் உள்ளூர் யுத்தம் நடைபெற்று நிறைவடைந்த பின்னர் அந்த சட்டம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை . ஆனால் இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டால் மக்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படும். எனவே தற்பொழுது இந்த நாட்டில் யுத்தம் ஒன்றும் இல்லை ஆகையால் பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டம் இந்த நாட்டிற்கு தேவையில்லை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு, இந்த நாட்டில் பல்லின மக்கள் வாழும் நாடு, எந்த பிரச்சனையாக இருந்தாலும் ஜனநாயக முறையில் தீர்க்கப்பட வேண்டும்.

சர்வாதிகாரம் தேவையில்லை. எந்த அரசாங்கமாக இருந்தாலும் மக்களின் குரல்களுக்கு செவி சாய்க்க வேண்டும். புதிய சட்டங்களை இயற்றி நாட்டில் புதிய பிரச்சைனைகளை தோற்றுவிக்க கூடாது. எனவே அரசாங்கத்தின் செயல் பாடுகள் நாட்டின் மக்கள் நலன் சார்ந்த விடயமாகவும் நாட்டினதும் நாட்டு மக்களினதும் அபிவிருத்தியை நோக்கிய பயணமாக அமைய வேண்டும். தனிப்பட்ட அரசியல் இலாபமாக இருக்க கூடாது. மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். எனவே இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் பொழுது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றார்.

# கல்முனை வலயக்கல்வி அலுவலக வருடாந்த இப்தார் நிகழ்வு



(நூருள் ஹுதா உமர்)

கல்முனை வலயக்கல்வி அலுவலக வருடாந்த இப்தார் நிகழ்வும் நல்லிணக்க மார்க்க சொற்பொழிவும் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் கல்விப்பணிமனை மண்டபத்தில் நேற்று (10) நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி எம்.எச். றியால் (ஹாபீஸி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், தவராசா கலையரசன் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம். பி.எம். வாஜித், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். அஸ்மி, உதவி ஆணையாளர் எம்.எஸ்.எம். அஸீம், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.எம்.ஏ. உமர் மௌலானா, கல்முனை மாநகர மற்றும் கல்முனை கல்வி மாவட்ட பொறியலாளர்கள், கணக்காளர்கள், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், ஓய்வுபெற்ற வலயக்கல்வி பணிப்பாளர்கள், ஓய்வு பெற்ற பிரதி மற்றும் உதவிக்கல்வி பணிப்பாளர்கள், வலய தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ பாடசாலைகளின் அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு படையினர், கல்முனை பிரதேச செயலக உயர் அதிகாரிகள், மாநகர சபை நிறைவேற்று அதிகாரிகள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பெரியகல்லாறு மெதடிஸ்த்த மின் தமிழ் பெண்கள் பாடசாலையில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு





(ரக்ஸனா)

பெரியகல்லாறு மெதடிஸ்த்த மிஷன் தமிழ் பெண்கள் பாடசாலையில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பெரியகல்லாறு மெதடிஸ்த்த மிஷன் தமிழ் பெண்கள் பாடசாலையில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் பூ.கமலதாசன் தலைமையில் செவ்வாய்கிழமை(28) நடைபெற்றது.

இதன்போது பட்டிருப்பு வலயக் கல்வில் பணிப்பாளர் சி.சிறீதரன், அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்ததுடன், பெரியகல்லாறு சர்வாத்த சர்வாத்த ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ நடேசடுணஸ்காந்த குருக்கள், கல்லாறு மெதடிஸ்த தேவாலய சேகர முகாமைக்குரு ச.டா.வினோத், கல்லாறு புனித அருளானந்தர் தேவாலயத்தின் அருட்தந்தை ஜே.நிகஸ்ரன் பீற்றஸ், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# பெண்ணிலைச் செயற்பாட்டாளரும், ஓவியருமான கமலா வாசுகியின் ஓவிய கண்காட்சி





பிரபல பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளரான கமலா வாசுகியின் 'கடந்து வந்த காலத்தைப் பார்த்தல்' எனும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி நேற்று 05ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 10ஆந் திகதி வரை இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு நகரில் உள்ள லேடி மனிங் டிறைவ் - கல்லடி புனித செபஸ்தியார் ஆலயம் அமைந்துள்ள வாவிக்கரை வீதி எனும் முகவரியில் இக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று இரண்டாவது நாளாக இடம் பெற்றுவருகின்து.

ஒரு பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளராகக் கடந்த மூன்று தசாப்த காலமாகத் தான் எதிர்கொண்ட அனுபவங்களை ஓவியக் கலையாக்கங்களூடாக வெளிக்காட்டும் கலைத் தொகுப்பாக இக்கண்காட்சி இடம்பெறுகின்றது. பெருமளவானவர்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை புனித மரியாள் தேவாலயத்தில் பெரிய வெள்ளி



(கதிரவன்)

உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் 2023.04.07 அன்று பெரிய வெள்ளி ஆராதனையை மேற்கொண்டார்கள்.

திருகோணமலை புனித மரியாள் தேவாலயத்தில் ஆயர் நோயல் இமானுவல் தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர் குடா கடற்கரையில் சிலுவை பாதை ஆராதனை இடம்பெற்றது.

பெருமளவிலான கிறிஸ்தவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

# அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(ம.கிரிசாந்)

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தின் நிதியனுசரனையில் ப்ரண்லி சிப் பௌன்டேசன் மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் இணைந்து 100 வறிய மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு உடபுஸல்லாவ முத்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது பிரதம அதிதியாக ப்ரண்லி சிப் பௌன்டேசன் இன் உப தலைவர் கிரிசாந்தன் அவர்களும் செயலாளர் ஆரிபா அவர்களும், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் இன் தலைவர் வினோஜ்குமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் போது மாணவர்களுக்கு புதிய கற்றல் முறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் நடாத்தப்பட்டது சிறப்பம்சமாகும்.

பிளேலோமவுண்ட் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 56 மாணவர்களுக்கும், ரப்பானொக் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 18 மாணவர்களுக்கும், சூரியகாபத்தன தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 26 மாணவர்களுக்கும் மொத்தமாக ரூபா 3 இலட்சம் பெறுமதியான 100 மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டன.


மக்களுக்கு யோகக் கலையின் உண்மைகளை உணர்த்த சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையே ''அறிவொளி வளையம்'' என்பது குறிப்பிடத்தக்கது. அறிவொளி வளையத்தினால் இலங்கையில் பல இடங்களில் சேவைகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.


# புல்மோட்டை பொன்மலைக் குடாவின்

# சிறுபான்மை இன மக்கள் காணிக்குள் புத்தர் சிலையா??

## வெடித்தது போராட்டம்

(ஹஸ்பர்)





திருகோணமலை,குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்மலைக் குடா பகுதியில் பௌத்த மதகுருக்களால் சிறுபான்மை இன மக்களின் காணிக்குள் அத்துமீறி அடாத்தாக புத்தர் சிலை வைக்க முற்பட்ட போது அமளி துமளி நிலவியுள்ளது .குறித்த சம்பவம் அண்மையில் (01.04.2023)இடம் பெற்றுள்ளதுடன் ஒரு வாரகாலமாக இந்த நிலமை தொடர்ந்தும் இடம் பெற்று வந்தது.

குறித்த காணிக்குள் நுழைந்த பௌத்த மதகுரு தனது மெய்ப்பாது காவலுடன் சென்றிருந்த வேலையில் பொது மக்களை மெய்பாதுகாவலன் துர்ப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் செய்துள்ளார். புல்மோட்டை அரிசி மலை விகாரையினை சேர்ந்த பௌத்த மதகுருவே இவ்வாறான சண்டித்தன வாய்த்தகராறில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

புல்மோட்டையில் உள்ள முஸ்லிம்கள் தமது காணிகளை தீவிரவாத பௌத்த பிக்குகளால் அபகரிப்பதை எதிர்கொள்கின்றனர்.

புல்மோட்டை முஸ்லிம்களுக்கு சொந்தமான பல ஏக்கர் காணிகள் பொன்மலைக்குடா மற்றும் அரிசிமலை பிரதேசங்களில் பௌத்த கட்டிடங்களை அமைப்பதற்காக தீவிரவாத பௌத்த பிக்குகளினால் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் பௌத்த விகாரைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதற்குப் பின்னணியில் தீவிரவாதத் துறவியான பாணமுரே திலகவன்ச தேரர் உள்ளார்.

முஸ்லிம் குடியிருப்பாளர்களின் கூற்றுப்படி, அவர் தற்போது அப்பகுதியில் உள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான 500 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தை சுவீகரித்து வருகிறார். புல்மோட்டைக்கு அப்பாலும் விரிவடையும் மற்றும் முஸ்லிம் குடியிருப்பாளர்களிடையே அதிக கவலைகளை எழுப்பிய ஆக்கிரமிப்பு, விரிவாக்க கொள்கைகளுக்காக அவர் நன்கு அறியப்பட்டவர்.

புல்மோட்டை திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மையான முஸ்லிம் கிராமம்; கிட்டத்தட்ட 95 சதவீத மக்கள் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். அரிசி மலை விகாரை பகுதியை அண்டிய வகையில் சிறுபான்மையின மக்களுடைய காணிக்குள் புகுந்து அடாத்தாக புத்தர் சிலை வைப்பதற்கான முயற்சியில் மட்டுமன்றி அமைச்சரவை பாதுகாப்பு உத்தியோகத்தர் இருவர் குறித்த தேரருக்கு வழங்கப்பட்டு அரச செலவுகளில் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன இவ்வாறான மெய்பாதுகாவல்களாலையே பொது மக்களை சுட்டுக் கொல்வதாக துர்ப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் இது மட்டுமன்றி தனியார் காணியின் வேலியை தகர்த்தெறிந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களுடைய காணிகள் அண்மைக் காலமாக தொல்பொருள் என்ற போர்வையில் வடகிழக்கில் அபகரிக்கப்படுவதாகவும் இவ்வாறான இனவாத செயற்பாடுகளை மேற்கொள்ளும் சுவீகரிப்பு விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இல்லாது போனால் வடகிழக்கை முடக்குவோம் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் 04.04.2023 ந்திகதி இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்வில் புத்தசாசன அமைச்சர் விதும் விக்ரமநாயக்கவை நோக்கி எச்சரித்துள்ளதுடன் நீங்கள் இனவாத அமைச்சர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



புல்மோட்டை பொன்மலை குடா காணிக்கு சொந்தமான மக்கள் அன்றாட ஜீவனாம்சமாக கடல் தொழில் ,விவசாயம் போன்றவற்றை நம்பியே வாழ்கின்றனர் இவ்வாறான இனவாத சம்பவங்கள் மக்களிடையே நல்லிணக்கத்தை சீர்குழைத்து கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது .பெரும்பான்மை இன மக்களே இல்லாத பகுதியில் புத்தர் சிலையை நிறுவ முற்படுவதை ஏற்க முடியாது. இந்த விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன்,இம்ரான் மஹ்ரூப் ,றவூப் ஹக்கீம்,இரா.சாணக்கியன்,எம்.எஸ்.தௌபீக் போன்றவர்களும் குரல் எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் இம்ரான் மஹ்ரூப் எம்.பி உரையாற்றுகையில் ;

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள,அரிசி மலை பொன்பரப்பி மலை என்னும் பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவர் புத்தர் சிலை ஒன்றை வைக்க முற்பட்டதும், அதனை தடுப்பதற்கு பொதுமக்கள் முனைந்த போது அங்கு இனமுருகல் ஏற்பட்டதாகவும் அங்கு சிலை வைப்பதை தடுக்க முற்பட்ட பொதுமக்களுக்கு பிஸ்டலை காண்பித்து, அவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்

, தொல் பொருள் திணைக்களத்தின் விசேட வர்த்தமானி அறிவித்தல்கள், மக்களின் பாரம்பரிய வசிப்பிடம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படாமலே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகளோடு பௌத்த பிக்குகளும் செல்கிறார்கள்.

அதிகாரிகள் பார்க்கின்ற வேலைகளோடு இவர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? என்றும் இம்ரான் மஃரூப் எம்பி நேரடியாக கேள்வி எழுப்பினார். மேலும், கேள்வி நேரத்தில், இந்த சிலை வைப்பு விவகாரம் தொடர்பில் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரிடம் நேரடியாக பல கேள்வி எழுப்பினார். இது சம்பந்தமாக, தனக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்றும் இது தொடர்பில் ஆராய்ந்து விளக்கத்தை தருவதாகவும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறினார்.

அப்பட்டமான இவ்வாறான செயல்கள் மூலமாக நாட்டில் வடகிழக்கு பகுதிகளில் இந்த நிலை தொடர்கின்றது அரசாங்கம் இந்த விடயத்தை உடன் நிறுத்த வேண்டும் என்பதே சிறுபான்மை சமூகத்தின் எதிர்பார்ப்பாகும் .கடந்த காலங்களில் இவ்வாறு தொல்பொருள் என்ற போர்வையில் பொது மக்களுடைய காணி சுவீகரிப்பு செய்யப்படுவதுடன் தனியார் காணிக்குள் சிலை வைக்க முற்பட்டு பௌத்த மயமாக்கத்தை விரிவுபடுத்துவதாகவே அமைகின்றது. மக்களுக்கு சொந்தமான காணியில் நிம்மதியாக அவர்கள் குடியேறவோ அல்லது விவசாய தோட்ட செய்கையில் ஈடுபடவோ அனுமதிக்க வேண்டும் தற்கால பொருளாதார பின்னடைவில் நாடு இருக்கும் நிலையில் சிறுபான்மை இன மக்கள் மீது பௌத்த ஆதிக்கத்தை கொண்டு நிலை நாட்ட நினைப்பதை ஒரு போதும் ஏற்க முடியாது. இதற்கான தீர்வுகளை பொன்மலை குடா மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



# சுபோகிருது என்றால் மங்கலம்!
# அறிவியல் சார்ந்த தமிழர் புத்தாண்டு!



புதிய வருடம் 'சுபோகிருது' என்ற பெயரில் இன்று உதயமாகிறது. தமிழரின் 60 வருட சுற்றுவட்டத்தில் 37 வது வருடம் இது.. 'சுபோகிருது' என்றால் தமிழில் 'மங்கலம்' என்று பொருள். அத்தகைய மங்கலமான புதிய வருடத்தை மங்கலமாக வரவேற்க வேண்டும்.

தமிழர்கள் ஏன் சித்திரை 1ஐ புத்தாண்டாக கொண்டாடினார்கள்? என்பதை அறிவீர்களா? அதற்கு அறிவியல் சார்ந்த விளக்கம் உள்ளதையும் அறிவீர்களா?

சூரியன் மிகத் துல்லியமாக கிழக்கில் உதிக்கும் நாள் தான் சித்திரை 1. எனவேதான் தமிழர்கள் சித்திரை 1ஐ புத்தாண்டாக கொண்டாடினர் .

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் துல்லியமாக கணித்துக் கூறிய வானியல் சாஸ்திரம் இந்துசமயம் சொல்லி வைத்த நமக்குத் தெரியாத உண்மைகள் எனலாம். இந்த நவீன விஞ்ஞானம் கண்டுபிடிப்பு ஆராய்ச்சிகள் எல்லாம் வரமுன்பே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழன் சந்திர சூரிய கிரகணங்களைக் கணித்து பஞ்சாங்கத்தில் பொறித்திருந்தான். அதுமட்டுமின்றி சந்திர சூரிய நகர்வுகள் நல்ல து கெட்டது நாள் கோள் பலன் அனைத்தும் அன்றே கணிக்கப்பட்டன. அத்தகைய அறிவுபூர்வமான சமுதாயமாக தமிழர் சமுதாயம் அன்றே விளங்கியிருந்தது.

பொதுவாக சித்திரை 1 ஆடி 1ஐப்பசி 1 தை 1 இவற்றை எல்லாம் விழாவாக நாம் கொண்டாடுறது ஏதோ ஒரு சடங்கு / பழக்கம் என எண்ணியிருக்கின்றோம். அப்படியல்ல.

நம் முன்னோர்கள் இதுக்கு பின்புலமாக மிகப்பெரிய அறிவியலை வைத்திருந்தார்கள் என்பது தெரியுமா?

'சூரியன் உதிக்கும் திசை கிழக்கு' என்று சிறு பிள்ளைகளுக்கும் தெரியும்.

என்றாவது ஒரு அளவை வைத்து சூரியன் உதிக்கின்ற போது சோதித்து இருக்கிறோமா? என்றால் கண்டிப்பாக இல்லை...என்று தான் சொல்ல வேண்டும்.

வெள்ளையர்கள் நம் அறிவியலை அழித்துவிட்டு, ஒரு முட்டாள் தனமான கல்வியை புகுத்தி விட்டான் என்பதற்கு இதுவும் ஒரு சான்று..

ஆம் சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும்..!!

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கி திரும்பும்.

அதன் பின் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும், பின்னர் தென்கிழக்கு நோக்கி நகரும்.

இப்படி சரியாக கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு என்று போயிட்டு மறுபடியும் கிழக்குக்கு வர ஆகிற நேரம் சரியாக ஒரு வருடம்.

சரி.. இதுக்கும் தமிழ் மாதத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்கலாம்.

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான் 'சித்திரை 1'. தமிழ் புத்தாண்டு. (In science it is called Equinox)

அதன் பின்னர் சரியாக வடகிழக்கு புள்ளி தான் 'ஆடி 1' .ஆடி பிறப்பு.(solstice)

மறுபடியும் கிழக்குக்கு வரும்போது 'ஐப்பசி 1'. தீபாவளி. (equinox)

மீண்டும் சரியாக தென்கிழக்கு - இப்போது 'தை 1'. பொங்கல். (solistice)

இந்த வானியல் மாற்றங்களையும், அதனை சார்ந்த பருவ கால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர்கள், இவற்றை அனைவரும் அறியும் வகையில் தான் திருவிழாக்களாக கொண்டாடினார்கள்.

சித்திரை (vernal equinox) - புத்தாண்டு.
ஆடி 18 (summer solstice) - ஆடிப்பிறப்பு.
ஐப்பசிஅமாவாசை(autumn equinox)- தீபாவளி.
தை 1(winter solstice) - பொங்கல்.

அப்படிப்பட்ட ஒரு புத்தாண்டு பிறப்பை இன்று கொண்டாடுகின்றோம். அதுவும் 60 வருட சுழற்சியில் 37 வது வருடமான மங்கலம் என்னும் சுபோகிருது புதிய வருடத்தை வரவேற்கிறோம்.

இத்தகைய அறிவியல் சார்ந்த விடயத்தை நமது அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் கொண்டு சேர்க்க வேண்டும்.

கடந்துவந்த கடினமான 2022 ஆம் ஆண்டிலே நடந்த நல்லதையும் தீயதையும் எண்ணிப்பார்த்து நமது குறைநிறைகளை நிவர்த்தி செய்து, மலர்ந்துள்ள புதிய ஆண்டை வரவேற்பதோடு, கடந்த ஆண்டு முழுவதும் நமக்கு உதவிய கடவுளுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் கூறிக்கொண்டு, மலர்ந்துள்ள இந்த ஆண்டு புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள் நல்ல சிந்தனைகள் என்பனவற்றால் ஒரு உயிரூட்டமுள்ள விசேட ஆண்டாக நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் அமைந்திடவும், இலங்கை முழுவதும் பிரகாசமான சந்தோசம் நிறைந்த சுபீட்ஷமான வாழ்வு மக்களுக்கு கிடைத்திடவும், எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து... நம்மால் முடிந்தவரை எல்லோரையும் நேசித்து இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் உதவி செய்வோம் வாழும் காலம் முழுவதும் எல்லா மக்களையும் நேசிப்போம்...

**தமிழ் வருடங்கள்!**

சுபோகிருது என்றால் மங்கலம் என்று பொருள். அத்தகைய சிறப்பு பெயருடைய புது வருடத்தை வரவேற்பதில் மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழன் அன்று வகுத்த 60 தமிழ் வருடங்களின் பெயர்களும் அவற்றின் சமஸ்கிருதம் மற்றும் தமிழ்ப்பெயர்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

01. பிரபவ - நற்றோன்றல்
**Prabhava1987&1988**

02. விபவ - உயர்தோன்றல்
**Vibhava 1988&1989**

03. சுக்ல - வெள்ளொளி
**Sukla 1989&1990**

04. பிரமோதூத - பேருவகை
**Pramodoota 1990&1991**

05. பிரசோற்பத்தி - மக்கட்செல்வம்
**Prachorpaththi 1991&1992**

06. ஆங்கீரச - அயல்முனி
**Aangirasa 1992&1993**

07. ஸ்ரீமுக - திருமுகம்
**Srimukha 1993&1994**

08. பவ - தோற்றம்
**Bhava 1994&1995**

09. யுவ - இளமை
**Yuva 1995&1996**

10. தாது - மாழை
**Dhaatu 1996&1997**

11. ஈஸ்வர - ஈச்சுரம்
**Eesvara 1997&1998**

12. வெகுதானிய - கூலவளம்
**Bahudhanya 1998&1999**

13. பிரமாதி - முன்மை
**Pramathi 1999&2000**

14. விக்கிரம - நேர்நிரல்
**Vikrama 2000&2001**

15. விஷு - விளைபயன்
**Vishu 2001&2002**

16. சித்திரபானு - ஓவியக்கதிர்
**Chitrabaanu 2002&2003**

17. சுபானு - நற்கதிர்
**Subhaanu 2003&2004**

18. தாரண - தாங்கெழில்
**Dhaarana 2004&2005**

19. பார்த்திப - நிலவரையன்
**Paarthiba 2005&2006**

20. விய - விரிமாண்பு
**Viya 2006&2007**

21. சர்வசித்து - முற்றறிவு முழுவெற்றி
**Sarvajith 2007&2008**

22. சர்வதாரி - முழுநிறைவு
**Sarvadhari 2008&2009**

23. விரோதி - தீர்பகை
**Virodhi 2009&2010**

24. விக்ருதி - வளமாற்றம்
**Vikruthi 2010&2011**

25. கர - செய்நேர்த்தி
**Kara 2011&2012**

26. நந்தன - நற்குழவி
**Nandhana 2012&2013**

27. விஜய - உயர்வாகை
**Vijaya 2013&2014**

28. ஜய - வாகை
**Jaya 2014&2015**

29. மன்மத - காதன்மை
**Manmatha 2015&2016**

30. துன்முகி - வெம்முகம்
**Dhunmuki 2016&2017**

31. ஹேவிளம்பி - ``பொற்றடை
**Hevilambi 2017&2018**

32. விளம்பி - அட்டி
**Vilambi 2018&2019**

33. விகாரி - எழில்மாறல்
**Vikari 2019&2020**

34. சார்வரி - வீறியெழல்
**Sarvari 2020&2021***

35. பிலவ - கீழறை
**Plava 2021&2022**

36. சுபகிருது - நற்செய்கை
**Subakrith 2022&2023**

**இவ்வருடம்**
**தமிழ் புத்தாண்டு**

37. சோபகிருது - மங்கலம்
**Sobakrith 2023&2024**

38. குரோதி - பகைக்கேடு
**Krodhi 2024&2025**

39. விசுவாசுவ - உலகநிறைவு
**Visuvaasuva 2025&2026**

40. பரபாவ - அருட்டோற்றம்
**Parabhaava 2026&2027**





உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

41. பிலவங்க - நச்சுப்புழை
**Plavanga 2027&2028**

42. கீலக - பிணைவிரகு
**Keelaka 2028&2029**

43. சௌமிய - அழகு
**Saumya 2029&2030**

44. சாதாரண - பொதுநிலை
**Sadharana 2030&2031**

45. விரோதகிருது - இகல்வீறு
**Virodhikrithu 2031&2032**

46. பரிதாபி கழிவிரக்கம்
**Paridhaabi 2032&2033**

47. பிரமாதீச - நற்றலைமை
**Pramaadhisa 2033&2034**

48. ஆனந்த - பெருமகிழ்ச்சி
**Aanandha 2034&2035**

49. ராட்சச - பெருமறம்
**Rakshasa 2035&2036**

50. நள - தாமரை
**Nala 2036&2037**

51. பிங்கள - பொன்மை
**Pingala 2037&2038**

52. காளயுக்தி - கருமைவீச்சு
**Kalayukthi 2038&2039**

53. சித்தார்த்தி - முன்னியமுடிதல்
**Siddharthi 2039&2040**

54. ரௌத்திரி - அழலி
**Raudhri 2040&2041**

55. துன்மதி - கொடுமதி
**Dunmathi 2041&2042**

56. துந்துபி - பேரிகை
**Dhundubhi 2042&2043**

57. ருத்ரோத்காரி - ஒடுங்கி
**Rudhrodhgaari 2043&2044**

58. ரக்தாட்சி - செம்மை
**Raktakshi 2044&2045**

59. குரோதன - எதிரேற்றம்
**Krodhana 2045&2046**

60. அட்சய - வளங்கலன்
**Akshaya 2046&2047**

இனி எந்த தங்குத்தடையும் இன்றி, 60 தமிழ் வருடங்களை சுயத்தை இழக்காமல் தமிழ்ப்பெயரோடு தமிழ் புத்தாண்டை வாழ்த்துவோம்...!

**அனைவருக்கும்**
**தமிழ் புத்தாண்டு**
**வாழ்த்துக்கள் !**

# களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் விளையாட்டுப் போட்டி
















**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலையின்) வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி சனிக்கிழமை(08.09.2023) மாலை மேற்படி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் கே.சத்தியமோகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன் அவர்கள் இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். மேலும் இதன்போது, கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர்(நிதி) எஸ்.நேசராஜா, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், வைத்தியர் எஸ்.மயுரேஷன், கடற் படையணியின் 38வது பிரிவின் கட்டளை அதிகாரி ஜி.நிலாந், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் ஏ.பகிரதன், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் ஜே.தியாகராஜா, உள்ளிட்ட கல்வி அதிகாரிகள், கிராமிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுத்துறை அதிகரிகள், மாணவர்கள், மழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

பாரதி, நாவலர், விபுலானந்தர், ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர். இதில் பாரதி இல்லம் 493 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், நாவலர் இல்லம் 448 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், விபுலானந்தர் இல்லம் 414 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்க அதிதிகளால் வெற்றிக் கேடயங்களும், பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசலை ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர்களுக்குமான விளையாட்டுப் போட்டிகளும் இதன்போது இடம்பெற்றன. தொடர்ந்து மாணர்வகளின் அணி நடை, மற்றும் வேண்வாத்திய இசை என்பன பார்ப்போரைக் கவந்ததுடன், இதன்போது ஆற்றுகை செய்யப்பட்ட பாரம்பரிய கலை நிகழ்வுகள் அனைவரையும் கொள்ளைகொள்ள வைத்தையும் சிறப்பம்சமாகும்.